ICRC

## இலங்கை

# காணாமல் போனவர்கள் தொடர்பான சர்வதேச தினம்

செப்ரெம்பர் 2021



ICRC

**செஞ்சிலுவை சர்வதேச குழுவானது(செ.ச.குழு), ஆகஸ்ட் 30ஆம் திகதி உலகெங்கிலும் ஆயுத நெருக்கடி உள்ளிட்ட வன்முறைகள், அனர்த்தங்கள், மனிதாபிமான அவசர நெருக்கடிகள், புலம்பெயர்வு ஆகியவை காரணமாக, காணாமற்போன அல்லது தத்தமது குடும்பங்களில் இருந்து பிரிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களை நினைவுகூர்கிறது. உலகளாவிய ரீதியில், 210,000 இற்கு மேற்பட்டவர்கள் காணாமல் போனவர்களாக செஞ்சிலுவை செம்பிறை இயக்கத்தின் குடும்பத் தொடர்பு வலைப்பின்னல் மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இவ்வமைப்பு குடும்பங்களை ஒன்றிணைக்க உதவுகிறது.**

இலங்கையில் 1983 தொடக்கம் 2009 வரையிலான ஆயுத நெருக்கடியின்போது, தமது உறவுகள் காணாமற்போன குடும்பங்களில் இருந்து அவர்களைத் தேடிக் கண்டுபிடித்துத் தருமாறு கோரி சுமார் 35,000 விண்ணப்பங்கள் செ.ச.குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டன. இன்னமும் 15,000 விண்ணப்பங்கள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. சில விண்ணப்பங்கள் 1990ஆம் ஆண்டு வரை பழமை வாய்ந்தவை. இந்த எண்களின் பின்னால், தமது உறவினர்கள் எங்கே இருக்கிறார்கள் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதறியாமல் பதகளிப்புடனும், நிச்சமற்ற தன்மையுடனும் வாழும் 'ஆட்கள் காணாமல் போன குடும்பங்களின்' அவலத்துயர் உள்ளது.

செ.ச.குழுவின் பணிப்பாளர் நாயகம் ரொபர்ட் மார்டினி கருத்து வெளியிடுகையில், "தமது அன்புக்குரியவர்கள் மறக்கப்படவில்லை என்பதை ஆட்கள் காணாமற்போன குடும்பங்கள் அறிய வேண்டுமென நாம் விரும்புகிறோம். அவர்கள் தனித்து விடப்படவில்லை. அவர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்து, அதன்மூலம் அறியும் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு அரசுகள் தமது அதிகாரத்திற்கு உட்பட்ட சகலதையும் செய்வதற்கு நாம் தொடர்ந்தும் உதவுவோம்," என்று தெரிவித்தார்.

இலங்கையில், ஆட்கள் காணாமல் போன குடும்பங்களின் உளவியல்-சமூக, பொருளாதார, சட்ட மற்றும் நிர்வாக ரீதியான தேவைகளை நிறைவேற்றுவதற்காக நாடு தழுவிய ரீதியிலான உதவித் திட்டத்தை செ.ச.குழு நடைமுறைப்படுத்துகிறது. அத்துடன், அந்தக் குடும்பங்களின் அன்புக்குரியவர்கள் எங்கிருக்கிறார்கள் என்ற கேள்விக்கு பதில் அளிக்கக்கூடிய பொறிமுறைக்காக பரிந்து பேசுகிறது.

## சிறைச்சாலைகளில் கொவிட்-19 பதிலளிப்பு நடவடிக்கைகளுக்கு உதவுதல்




கையுறைகள், பாதுகாப்பு அங்கிகள், முகத்திரை, கண்ணாடிகள், முகக்கவசங்கள், தொப்பிகள், தொடுகை தேவைப்படாத உடல் வெப்பமானிகள், சுத்திகரிப்பு மற்றும் தொற்றுநீக்கி கலவைகள், தனிநபர் சுகாதார பொருட்கள் உள்ளிட்ட தனிநபர் பாதுகாப்புக் கருவிகளை அன்பளிப்புச் செய்வதன் மூலம், செ.ச.குழுவானது சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கும், சுகாதார அமைச்சிற்கும் உதவி செய்கிறது. இந்தக் கருவிகள் கொழும்பிலுள்ள சிறைச்சாலைகள் தலைமையகம், காலி சிறைச்சாலை, அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலை, கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலை, நீர்கொழும்பு சிறைச்சாலை ஆகியவற்றில் பயன்படுத்தப்படும்.

## மஹர சிறைச்சாலை மறுசீரமைப்பு




2020 நவம்பர் மாத கலவரங்களில் சேதமடைந்த மஹர சிறைச்சாலையின் வைத்தியசாலையைப் புதுப்பிக்க செ.ச.குழு கட்டுமாணப் பொருட்களை வழங்கியது. இந்த உபகரணங்கள் 2017இல் செ.ச.குழு நிர்மாணித்த மூன்று மருத்துவ விடுதிகளை திருத்தி, மீளமைப்பதற்குப் பயன்படுத்தப்படும். சிறைச்சாலைகள் பணிப்பாளரின் மேற்பார்வையில், தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களால் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்படும். இந்தப் பணிகளை 2022ஆம் ஆண்டு முற்பகுதியில் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. திருத்தப் பணிகளால் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களில் 1,700 இற்கு மேற்பட்டவர்கள் பயனடைவார்கள்.

# சர்வதேச மனிதாபிமான சட்டமும் இயற்கை சூழலை பாதுகாத்தலும்



பண்டாரநாயக்க சர்வதேச ராஜதந்திர பயிற்சி நிறுவகத்துடன் (BIDTI) இணைந்து, செ.ச.குழு 'சர்வதேச மனிதாபிமான சட்டமும் இயற்கை சூழலை பாதுகாத்தலும்: தவிர்க்கக்கூடிய பதிலளிப்பு' என்ற தொனிப்பொருளில் இணையவழிக் கருத்தரங்கை ஏற்பாடு செய்தது. 2020இல் செ.ச.குழு பிரசுரித்த 'ஆயுத நெருக்கடியில் இயற்கைச் சூழலை பாதுகாத்தலுக்கான வழிகாட்டல்கள்' என்ற ஆவணத்தின் புதிய தகவல்கள் சேர்க்கப்பட்ட வடிவத்தைக் கொண்டு இயற்கை சூழலை பாதுகாக்கும் மனிதாபிமான சட்டம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது இதன் நோக்கமாக இருந்தது. பயனுறுதி வாய்ந்த பதிலளித்தலை வடிவமைப்பதில் தேசிய சட்டங்கள், கொள்கைகள், இராணுவ நடைமுறைகள் ஆகியவற்றின் வகிபாகம் பற்றி சட்டக் கல்வித்துறை மற்றும் பாதுகாப்புப் படைகளின் நிபுணர்கள் கலந்துரையாடினார்கள். கருத்தரங்கில் உரையாற்றியவர்கள், ஆயுத நெருக்கடியின்போது சுற்றாடலைப் பாதுகாப்பதற்கு உள்நாட்டில் இருக்கக்கூடிய சட்டரீதியான பதிலளிப்புக்கள் பற்றியும், விருத்தி செய்யக்கூடிய துறைகள் பற்றியும் கலந்துரையாடினார்கள். அத்துடன் இணக்கப்பாட்டு ஆய்வை மேற்கொள்வதிலும், உரிய அமைப்புக்கள் மத்தியில் ஒருங்கிணைப்பு மற்றும் இவ்விடயம் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் சர்வதேச மனிதாபிமான சட்ட தேசிய குழுவின் வகிபாகத்தை வலியுறுத்தினார்கள்.

# குடும்பத் தொடர்புகளை மீளமைத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் தேவை மதிப்பீடு



செ.ச.குழு, இலங்கை செஞ்சிலுவை சங்கத்துடன் இணைந்து நாடு தழுவிய ரீதியிலான குடும்பத் தொடர்புகளை மீளமைத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் தேவை மதிப்பீட்டுத் திட்டத்தை முன்னெடுக்கிறது. காணாமல் போனவர்களைத் தேடிக் கண்டுபிடித்தலிலும், அதற்குரிய சேவைகளை அணுகுவதிலும் தேசிய சங்கத்தின் ஆற்றலை விருத்தி செய்வது மதிப்பீட்டின் நோக்கமாகும். இந்த மதிப்பீடு ஆறு மாதங்கள் வரை நீடிப்பதுடன், அதில் கண்டறியப்படும் விடயங்களைக் கொண்டு இரு நிறுவனங்களும் புலம் பெயர்ந்தவர்களுக்கும், வெளிநாட்டவர்களுக்கும், இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உதவிட வழிவகுக்கும்.

# சமய மற்றும் மனிதாபிமான கோட்பாடுகளுக்கிடையிலான தொடர்பு : கிறிஸ்தவம் மற்றும் இந்து சமயங்கள் பற்றிய ஆய்வை விஸ்தாரித்தல்




செ.ச.குழுவானது பௌத்தம் மற்றும் மனிதாபிமானக் கோட்பாடுகளுக்கிடையிலான தொடர்பை ஆராய்வதற்காக கடந்த சில ஆண்டுகளில் பௌத்த கல்வி வட்டாரங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியது. இதே மாதிரியான ஆய்வு மற்றும் சம்பாஷணைக்காக கிறிஸ்தவ மற்றும் இந்து கல்விமான்களை தொடர்புபடுத்தும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இலங்கை இறையியல் கல்லூரி, யாழ்ப்பாண பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகப் பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்த கிறிஸ்தவ கல்விமான்கள் பங்கேற்ற ஒன்லைன் விளக்க நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சமயம் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டம் பற்றிய மேலதிக ஆய்வுகளுக்காக முன்னணி இந்து கல்விமானும், பேச்சாளருமான கம்பவாரிதி ஜெயராஜ் அவர்களை நாம் சந்தித்திருந்தோம்.

# ஒன்றிணைந்த எம்மை நிறுத்த முடியாது: உலக செஞ்சிலுவை மற்றும் செம்பிறை தினம்




செஞ்சிலுவை மற்றும் செம்பிறை பணியாளர்களும், தொண்டர்களும் ஒவ்வொரு நாளும் உலகம் முழுவதும் உள்ள சமூகங்களில் மாறுதலை ஏற்படுத்துகிறார்கள். பெருந்தொற்று நிலையால் எழும் மேலதிக சவால்களுக்கு மத்தியிலும் அவர்கள் சமூகங்களுக்கு சேவையாற்றுவதில் கொண்டுள்ள திடசங்கற்பத்தை பாராட்டும் வகையில், ''ஒன்றிணைந்த எம்மை நிறுத்த முடியாது' என்ற தொனிப்பொருளில் மே மாதம் எட்டாம் திகதி உலக செஞ்சிலுவை மற்றும் செம்பிறை தினம் கொண்டாடப்பட்டது.

இந்தக் கொண்டாட்டத்தில் செ.ச.குழுவின் தலைவர் பீற்றர் மோவ்ரர் கருத்து வெளியிடுகையில், ''செஞ்சிலுவை மற்றும் செம்பிறை பணியாளர்களும், தொண்டர்களும் சகல நெருக்கடிகளின் போதும் முன்னரங்கில் பணியாற்றுவதுடன், சுயபாதுகாப்பின் ஆபத்தைக் கருதாமல் வேலை செய்கிறார்கள். அவர்கள் ஆயுத நெருக்கடிகள், அனர்த்தங்கள் உள்ளிட்ட மனிதாபிமான நெருக்கடிகள் போன்ற மிகவும் பாரதூரமான சந்தர்ப்பங்களில் மனிதப் பேரவலத்தைத் தவிர்த்து அல்லது இல்லாமல் செய்வதற்காக சமூகத்திற்கு உள்ளேயும், சமூகத்திற்காகவும் சளைக்காமல் பணியாற்றி வருகிறார்கள். உலக செஞ்சிலுவை மற்றும் செம்பிறைத் தினமானது, அவர்களுக்கு நாம் நன்றி செலுத்தும் நாளாகும். அவர்கள் உலகம் முழுவதும் ஒவ்வொரு நாளும் மாறுதலை ஏற்படுத்தி, ஒருவரும் விடுபடாதிருப்பதை உறுதி செய்கிறார்கள்.''

இவ்வருடம் 25 மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த 50 மாணவர்கள் பயன்பெறும் விதத்தில் புலமைப்பரிசில் திட்டமொன்றை அமுலாக்குவதற்காக சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை பங்குதாரர்கள் இலங்கை செஞ்சிலுவை சங்கத்துடன் இணைந்து கொண்டார்கள். இந்த நீண்டகால முன்முயற்சியின் மூலம், தமது கல்வி பூர்த்தியாகும் வரையில் மாணவர்கள் மாதாந்த ஊக்குவிப்புத் தொகையைப் பெறுவார்கள். இந்த புலமைப்பரிசில் திட்டம் தேசிய சங்கத்தின் கொழும்புக் கிளையில், அதன் தலைவர் ஜகத் அபேசிங்க முன்னிலையில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. பாடசாலை மாணவர் மத்தியில் சுற்றாடல்-நேய பழக்கவழக்கங்களை ஊக்குவிக்கும் வகையில், 'இழந்த உலகை மீளவும் கட்டியெழுப்புதல்' என்ற வேலைத்திட்டத்தின் கீழ், இலங்கை செஞ்சிலுவை சங்கம் 25 மாவட்டங்களில் 250 மரங்களை நடுகை செய்தது.

தன்னார்வத் தொண்டர்களை கௌரவித்து, இலங்கையில் கொவிட்-19 பெருந்தொற்றைக் கட்டுப்படுத்துவதில் செ.ச.குழு மற்றும் தேசிய சங்கத்தினது கூட்டு பதிலளிப்பை வலியுறுத்தும் வகையில், காணொலி வெளியிடப்பட்டது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிங்கள, தமிழ், ஆங்கில வானொலி அலைவரிசைகளில் வானொலி நிகழ்ச்சியும், தொடர்ந்து கேள்விக்கு பதில் நிகழ்ச்சியும் ஒலிபரப்பானது.

உலக செஞ்சிலுவை மற்றும் செம்பிறை தினத்தில் இந்த இயக்கத்தின் ஸ்தாபகரும் முதலாவது நொபெல் பரிசை இணைந்து பெற்றவருமான ஹென்றி டுனான்ட் அவர்களின் ஜனன தினம் நினைவுகூரப்படுகிறது. சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சர்வதேச இயக்கம் உலகெங்கிலும் 14 மில்லியன் தன்னார்வத் தொண்டர்களைக் கொண்டிருக்கிறது.

# தரவுகளும், புள்ளிவிபரங்களும்

## 2021 மே முதல் ஆகஸ்ட் வரையில்

## ஆட்கள் காணாமற்போன குடும்பங்களின் தேவைகளில் உதவிடல்

- தேடிக் கண்டுபிடித்தல் விண்ணப்ப நடைமுறையின் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக **5** குடும்பங்கள் சந்திக்கப்பட்டதுடன், புதிதாக **3** கோரிக்கைகள் பதிவு செய்யப்பட்டன
- காணாமல் போனவர்களது உறவினர்களில் **701** பேர் வாராந்த உளவியல் உதவி அமர்வுகளில் இணைந்ததுடன், அவர்களில் **87** பேர் பொருளாதார, சட்ட, நிர்வாக, கல்வி, சுகாதார தேவைகளுக்கான உதவிகளுக்குரிய மூலவளங்களைப் பெறும் இடங்களுக்கு வழிகாட்டப்பட்டார்கள்.
- வாழ்வாதாரத்தை ஈட்டுவதற்குரிய உதவியாக **105** குடும்பங்களுக்கு நிதியுதவிகள் வழங்கப்பட்டன
- ஆட்கள் காணாமல் போன **22** குடும்பங்களுக்கு அவசர தேவைகளை (உணவு மற்றும் ஏனைய அத்தியாவசிய செலவுகள்) சமாளிக்க பல்நோக்கு நிதியுதவி வழங்கப்பட்டது
- ஆட்கள் காணாமல் போன குடும்பங்கள் அடங்கலாக, **300** இல்லங்களில் கொவிட்-19 விளைவுகள் பற்றிய பொருளாதாரப் பாதுகாப்பு பல்துறை கண்காணித்தல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

---

## ஆட்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலைமைகளை கண்காணித்தல்

- தடுத்து வைக்கப்பட்ட **1** இடத்திற்கு **1** விஜயம் மேற்கொள்ளப்பட்டது
- தடுத்து வைக்கப்பட்ட **28** ஆட்களை சந்தித்து, கண்டறிந்த விடயங்களும் பரிந்துரைகளும் குடிவரவு அதிகாரிகளிடம் நம்பகமாக பகிரப்பட்டன

- தடுத்து வைக்கப்பட்ட 28 ஆட்களை சந்தித்து, கண்டறிந்த விடயங்களும் பரிந்துரைகளும் குடிவரவு அதிகாரிகளிடம் நம்பகமாக பகிரப்பட்டன

- 10 இடங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 5,432 பேருக்கு சுகாதார பொருட்களும், தனிநபர் பாதுகாப்புக் கருவிகளும் சிறைச்சாலை சுகாதார உத்தியோகத்தர்களுக்கு விநியோகிக்கப்பட்டன. இவற்றில் 18,200 கையுறைகள், 2,750 பாதுகாப்பு அங்கிகளும், 1,500 முகத்திரைகளும், 325 கண்ணாடிகளும், FFP 2 ரகத்தைச் சேர்ந்த 3,500 முகக்கவசங்களும், 5,500 சத்திரசிகிச்சை தொப்பிகளும், 12,300 சத்திரசிகிச்சை முகக்கவசங்களும், தொடுகை தேவையற்ற 20 உடல் வெப்பமானிகளும் உள்ளடங்கும்

- செஞ்சிலுவை சங்கத்தின் (சுருக்கமான குடும்பச் செய்திகள் அடங்கிய) 3 தகவல்கள் 2 சிறைச்சாலை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டன.

- அங்குனகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் 200 கைதிகளுக்கான வீடியோ சந்திப்பு அறைகள் விருத்தி செய்யப்பட்டன

- 5,000 முகக் கவசங்களைத் தயாரிப்பதற்காக சிறைச்சாலைகள் தலைமையகத்திற்கு துணிகள் வழங்கப்பட்டன

- தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் 1,700 பேர் பயனடையும் விதத்தில், மஹர சிறைச்சாலையிலுள்ள வைத்தியசாலையை புனரமைக்க கட்டுமாணப் பொருட்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன

- தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் 1,200 பேர் பயனடையும் விதத்தில், புதிய மகஸின் சிறைச்சாலையில் களஞ்சியசாலையை புனரமைப்பதற்கும், சமையலறைக்கு எரிவாயு இணைப்பை ஏற்படுத்துவதற்கும் கட்டுமாணப் பொருட்கள் வழங்கப்பட்டன

- தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் 1,50 பேர் பயனடையும் விதத்தில், வெலிசறை தற்காலிக குடிவரவு நிலையத்தின் வெளிப்புற ஓய்வுப் பிரதேசம் மூடி மறைக்கப்பட உதவிசெய்யப்பட்டது.

---



## மனிதாபிமான சட்டத்தைப் பற்றி பிரசாரம் செய்தல்

- இலங்கை இறையியல் கல்லூரி, யாழ்ப்பாண பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகப் பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்த கிறிஸ்தவ கல்விமான்கள் 14 பேருடன் மத மற்றும் மனிதாபிமானக் கோட்பாடுகளில் செ.ச.குழுவின் பணிகள் பற்றிய ஒன்லைன் விளக்க நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன் தொடர்ச்சியாக ஜூலை 2ஆம் திகதி, இலங்கை இறையியல் கல்லூரியுடனான ஒன்லைன் சந்திப்பு இடம்பெற்றது.

- செ.ச.குழுவும், சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மற்றும் மனித உரிமைகள் அகடமியும் மே முதல் ஜூன் வரை ஒன்லைன் முறையில் கல்விமான்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுக்காக நடத்திய 14ஆவது முன்னேற்றகரமான சர்வதேச மனிதாபிமான சட்ட கருத்தரங்கில் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த சட்ட உத்தியோகத்தர் பங்கேற்றார்

- இந்துமத வட்டாரங்களுடன் தொடர்பை ஏற்படுத்தி, இந்துமதமும் சர்வதேச மனிதாபிமான சட்டமும் பற்றிய மேலதிக ஆய்வுகளுக்காக ஜூலை 28ஆம் திகதி புகழ்பெற்ற இந்து கல்விமான் கம்பவாரிதி ஜெயராஜ் அவர்களுடன் சந்திப்பு நடத்தப்பட்டது.

- ஆகஸ்ட் 31ஆம் திகதி BIDTI இன் ஒருங்கிணைப்புடன் சர்வதேச மனிதாபிமான சட்டம் மற்றும் இயற்கை சூழலை பாதுகாத்தல் பற்றிய இணையவழி கருத்தரங்கு நடத்தப்பட்டது. இதில் கல்வித்துறை, இலங்கை இராணுவம், சட்டமா அதிபர் திணைக்களம், செ.ச.குழுவு ஆகியவற்றின் பேச்சாளர்களும் கலந்து கொண்டார்கள்.

---

# இலங்கை செஞ்சிலுவை சங்கத்திற்கு உதவுதல்

- கிளை மட்டத்திலான அனர்த்த பதிலளிப்பு தொழில்நுட்பங்கள் பற்றி தன்னார்வ தொண்டர்கள் **64** பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது
- முதலுதவி பயிற்றுனர்கள் **25** பேர் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தால் நடத்தப்பட்ட ஞாபகமூட்டும் பயிற்சிநெறியில் கலந்துகெண்டனர்.
- மனிதாபிமான கொள்கைகள், சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை இயக்கம் பற்றிய **7** அமர்வுகள் நடத்தப்பட்டன.
- புலமைப் பரிசில் திட்டத்தை ஆரம்பித்தல், மரநடுகை, வானொலி கேள்வி-பதில் நிகழ்ச்சி, கொவிட்-19 கூட்டு பதிலளிப்பு பற்றிய காணொலி போன்றவற்றுடன் சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை தினம் கொண்டாடப்பட்டது.
- பருவப் பெயர்ச்சி காலத்திற்குத் தேவைப்படும் பட்சத்தில் பயன்படுத்த **1,400** துவாய்கள், **1,400** துப்பட்டாக்கள், 350 மடிக்கும் மெத்தைகள் ஆகியவற்றை வாங்க நிதி வழங்கப்பட்டது.
- கொவிட்-19 இன் மூன்றாம் அலைக்கான பதிலளிப்பிற்காக **2,500** கையுறைகள், **3,500** முகக்கவசங்கள், **2,800** வேறு பொருட்கள், **85,000** சத்திரசிகிச்சைக்கான முகக்கவசங்கள் ஆகியவற்றிற்காக தேசிய சங்கத்திற்கு நிதியுதவி வழங்கப்பட்டது.
- கொவிட்-19 தொற்றுப் பரவுவதைக் கட்டுப்படுத்தி, தடுப்பதற்காக (கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தளை, புத்தளம் ஆகிய) **6** மாவட்டங்களில் **488** பொது இடங்கள் கிருமிநீக்கம் செய்யப்பட்டன.
- நாடளாவிய ரீதியில் குடும்பத் தொடர்புகளை மீளக் கட்டியெழுப்பும் முயற்சியின் தேவை மதிப்பீடொன்று கூட்டாக ஆரம்பிக்கப்பட்டதுடன், (அனுராதபுரம், மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை, கண்டி, கிளிநொச்சி, மாத்தறை, நுவரெலியா, பொலன்னறுவை, திருகோணமலை, வவுனியா ஆகிய) **10** மாவட்டங்களில் **128** நேர்காணல்கள் தொலைபேசி ஊடாக நடத்தப்பட்டன.


**செஞ்சிலுவை சர்வதேச குழு**
29, லெயார்ட்ஸ் வீதி, கொழும்பு – 05
T + 94 (11) 250 33 46
F + 94 (11) 250 33 48
E-mail: colombo@icrc.org www.icrc.org

**வவனியா அலுவலகம்**
70, வைரவர் கோயில் வீதி,
வைரவ புளியங்குளம், வவுனியா
T +94 (0) 24222 28 55
F +94 (0) 24222 25 37

**மட்டக்களப்பு அலுவலகம்**
மன்ரேஸா வீதி, கொத்துக்குளம், பிள்ளையாரடி
மட்டக்களப்பு
T +94 (0) 65 222 70 70



© ICRC, October 2021


ICRC

facebook.com/icrc
twitter.com/icrc
instagram.com/icrc


1707/250 10.2021 Cover Photo: ICRC